www.padippakam.com

# Dansk-Tamilsk Venskabsforening
# டெனிஸ் தமிழ் தோழமை ஒன்றியம்

## nyhedsbrev nr.8 இதழ் 8

§§§§§§§§§§§§§§§§§§§§§§§§§§§§§§§§§§§§

01.03.90.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



INTERNATIONAL OPMÆRKSOMHED - INTERNATIONAL INDGRIBEN ER NØDVENDIG FOR AT SKABE EN FREDELIG LØSNING PÅ KRIGEN I SRI LANKA.

»CHANCHIVE« … bro . Danmark

MANGE LANDE ÆNDRER I DENNE TID POLITISK IDEOLOGI OG STYREFORM I RETNING AF NEDRUSTNING, FRED, FORBUNDSSTATSSTYRE OG DEMOKRATI.
ENDOG I SYD AFRIKA, SOM I MANGE, MANGE ÅR ER BLEVET STYRET AF DET HVIDE MINDRETAL, ER DER UDSIGT TIL LØSLADELSE AF NELSON MANDELA, SOM HAR SIDDET I FÆNGSEL I MERE END ET KVART ÅRHUNDREDE, OG TIL MERE MAGT TIL DE SORTE I DERES EGET LAND.
I SOVJETUNIONEN PRØVER MAN SERIØST OG IHÆRDIGT AT LØSE PROBLEMER GENNEM FORHANDLINGER, OG MINDRETALSGRUPPER GIVES STØRRE POLITISK OG ØKONOMISK SELVSTÆNDIGHED I DERES REPUBLIKKER.

MEN INDIEN OG SRI LANKA ER STADIGVÆK UENDELIGT LANGT VÆK FRA AT FORSØGE AT LØSE DERES PROBLEMER PÅ EN FREDELIG MÅDE OG MED FREDELIGE MIDLER. DET ER EN SKÆNDSEL, AT DISSE TO LANDE TVÆRTIMOD BEVÆGER SIG VÆK FRA DEMOKRATI OG FRIHED.

1987-AFTALEN MELLEM INDIEN OG SRI LANKA BRAGTE TAMILERNE I EN SÅ KATASTROFAL OG TRAGISK SITUATION, SOM INGEN KUNNE HAVE FORESTILLET SIG. ALLE MULIGE SLAGS OVERGREB OG UMENNESKELIGE AKTIVITETER HAR FUNDET STED UNDER BESÆTTELSEN AF DE INDISKE FREDSBEVARENDE STYRKER I DET NORDLIGE OG ØSTLIGE SRI LANKA. OG I DET SYDLIGE SRI LANKA FANDT REGULÆRE MASSAKRER MOD TAMILERNE STED. GRUNDEN TIL DISSE BLODSUDGYDELSER ER, AT INDIENS OG SRI LANKAS REGERINGER ALDRIG FIK TAMILERNES ELLER SINGALESERNES ACCEPT OG STØTTE. DER ER INGEN UDSIGTER TIL FRED I DEN AFTALE.
TILBAGETRÆKNING AF DE INDISKE STYRKER FINDER STED I FORBINDELSE MED EN NY FREDSAFTALE MELLEM DE TO LANDE. MEN SPØRGSMÅLET ER, HVEM DER VIL ACCEPTERE FORSLAGET TIL DEN NYE FREDSAFTALE. SPØRGSMÅLET ER F.EKS., OM SRI LANKAS 13 MILL. SINGALESERE VIL GODKENDE AFTALEN.

SRI LANKAS UDENRIGSMINISTER GAV I KOMMENTARER TIL DET NYE FREDSFORSLAG SENDT FRA INDIEN UDTRYK FOR INTERESSE I TRINCOMALLE-HAVNEN OG I AT SIKRE SRI LANKAS SUVERÆNE MAGT OVER OMRÅDET. DET BETYDER, AT HVIS TAMILERNE IGEN GRIBER TIL VÅBEN IMOD SRI LANKA REGERINGENS UNDERTRYKKELSE OG KRÆVER DE SAMME RETTIGHEDER, SOM DE BUDDHISTISKE SINGALESERE HAR I DET SYDLIGE SRI LANKA, SÅ VIL DET TAMILSKE MINDRETAL IGEN BLIVE GENSTAND FOR OVERGREB OG MASSAKRER FRA DEN INDISKE HÆR.

TAMILERNE HAR MANGE GANGE PRØVET AT FORHANDLE FRED MED SRI LANKAS REGERING. I 1919 FORHANDLEDE TAMILERNE OGSÅ - PÅ DET TIDSPUNKT VAR SRI LANKA UNDER ENGELSK STYRE - MEN RESULTATET VAR EN SKUFFELSE.

INTERNATIONAL OPMÆRKSOMHED OG INTERNATIONAL INDGRIBEN ER MEGET NØDVENDIG FOR AT FRELSE TAMILERNE FRA SRI LANKAS REGERING OG FRA DEN INDISKE REGERING.

(10.02.90)

படிப்பகம்

www.padippakam.com



இன்று பல நாடுகள் ஆயுதக்குறைப்பு, சமாதானம், ஆட்சிமுறை என்று பல வழிகளில் தமது பொருளாதாரக் கொள்கைகளை மாற்றி வருகின்றது. பல வருடங்களாக தென்னாபிரிக்கா, சிறுபான்மை இனத்தவரான வெள்ளையரால் ஆட்சி செலுத்தப்பட்டு வருகின்ற போதிலும், பெரும்பான்மை இனத்தவரான கறுப்பர்களின் மிகப்பெரும் தலைவரான நில்சன் மண்டேலாவை விடுதலை செய்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. நில்சன் மண்டேலா கடந்த 25 வருடங்களுக்கு மேலாக சிறைவாசம் செய்து வருவது அறிந்ததே.

சோவியத் யூனியன் கூட தனது குடியரசில் வாழும் சிறுபான்மை இனத்தவரின் அரசியல், பொருளாதார, சுயாட்சி போன்ற பிரச்சனைகளைப் பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்பதற்கு முயன்று கொண்டு வருகின்றது. ஆனால் இந்தியாவும், இலங்கையும் சமாதான முறையில் தமது பிரச்சனையை தீர்த்து வைப்பதில் முட்டுக்கட்டையாக உள்ளார்கள். இந்த இருபதாம் நூற்றாண்டில் இதைக் கூறுவதற்கே வெட்கக்கேடாக உள்ளது. இந்த இரு நாடுகளும் ஜனநாயகம், சுதந்திரம் ஆகியவற்றை விட்டு வெகு தொலைவில் சென்று கொண்டிருக்கிறார்கள்.

1987ம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையும், இந்தியாவும் செய்து கொண்ட ஒப்பந்தமானது, தமிழர்களை ஒரு வேதனைக்கும், விபரீதமான நிலைக்கும் இட்டுச்சென்றது என்பதை, தமிழர்கள் என்றும் மறந்து விட முடியாது. அது மட்டுமல்லாது வடகிழக்குப் பகுதிகளில், இந்திய இராணுவத்தின் காலப்பகுதிகளில் மிருகத்தனமான செயற்பாடுகளே நடந்தது என்பதைக் கவனிக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் தென் பகுதியிலும் பெரும் அழிவு தான் ஏற்பட்டது. இதற்குக் காரணம் யாதெனில், இலங்கை அரசும், இந்திய அரசும் இந்த ஒப்பந்தத்திற்கு தமிழ் மக்களினதும், சிங்கள மக்களினதும் ஆதரவைப் பெறமுடியாமல் போனதேயாகும். இந்த ஒப்பந்தத்தால் எந்தவொரு சமாதானத் தீர்வும் இல்லை என்றே கூற வேண்டும்.

இந்திய இராணுவ வெளியேற்றமானது மீண்டும் இரு நாடுகளுக்கிடையேயும், ஒரு புதிய ஒப்பந்தம் ஏற்படுவதற்கு வழி கோலப்படுகின்றது என்பது திட்டவட்டமான உண்மையாகும். இப்போதுள்ள கேள்வி என்னவென்றால், இவர்கள் புதிதாக ஒப்பந்தம் செய்யும் பட்சத்தில், யார் மனமுவந்து இதனை ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள் என்பதேயாகும். அப்படி இலங்கையில் உள்ள 13 மில்லியன் சிங்களவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், தமிழர்களைப் பொறுத்த வரையில் அது பூச்சியமே.

இந்தியாவினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட, புதிய ஒப்பந்தத்தின் பிரேரணை சம்பந்தமாக, இலங்கையின் வெளிநாட்டமைச்சர் குறிப்பிடுகையில், "இந்தியா திருகோணமலைத் துறைமுகம் மீது மிகவும் ஆவல் கொண்டிருக்கின்றது மட்டுமன்றி, இலங்கையின் பாதுகாப்பு மீதும் ஆவலாய் இருக்கின்றது" என்பதை இப் பிரேரணை எடுத்துக் காட்டுகின்றது என்றார்.

படிப்பகம்

www.padippakam.com



அதாவது தமிழர்கள், இலங்கையில் வாழும் ஏனைய சிங்கள-வர்களைப் போல, சம உரிமை வேண்டி, இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக திரும்பவும் ஆயுதம் ஏந்தினால், ஈழத் தமிழர்கள் மீண்டும் இந்தியன் இராணுவத்தால் படுகொலை செய்யப்படுவார்கள் என்பது உறுதி.

ஈழத்தமிழர் குழுக்கள் இந்தியாவின் உதவியுடன், "பேச்சு-வார்த்தை மூலம் தீர்வு காண்பதற்காக" இலங்கை அரசாங்கத்துடன் திம்புப் பேச்சு-வார்த்தைக்குச் சென்றிருந்தது அனைவரும் அறிந்ததே. தமிழர்கள் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்காகச் சென்றது இது தான் முதல் தடவை அல்ல. 1919ம் ஆண்டிலும் தமிழர்கள் இப்படியான ஒரு பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டவர்கள். அப்பொழுது, இலங்கை பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் இருந்தது. அப்பொழுதும் தமிழர்கள் கண்ட பலன் ஏமாற்றம் தான். எனவே பலப்பல பேச்சு வார்த்தைகளில் தமிழர்கள் கலந்து கொண்டு தோல்வி கண்டவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே ஈழத் தமிழர்களை, இலங்கை, இந்திய அரசாங்கத்திடம் இருந்து பாதுகாப்பதற்காக, இப் பிரச்சனையை, சர்வதேச சபைகளின் கவனத்திற்குக் கொண்டு வருவது, மிகமிக அத்தியாவசியமாகின்றது. (10.02.1990)



புன்னகையு மின்னிசையு மெங்கொளித்துப் போயினவோ
இன்னலொடு க்ண்ணீ ரிருப்பாகி விட்டனவே

பாரதி.

www.padippakam.com



Dansk-Tamilsk Venskabsforenings nyhedsbrev har regelmæssigt bragt nyheder fra Sri Lanka med Amnesty International som kilde. Amnesty Internationals sidste rapport i 1989 - dateret december 1989 - drejer sig udelukkende om udenretslige henrettelser foretaget i Sri Lanka. I det følgende bringes uddrag fra rapporten.

PÅSTÅEDE GENGÆLDELSESHENRETTELSER FORETAGET AF DE INDISKE FREDSBEVARENDE STYREKER I DET NORDLIGE SRI LANKA.

Skønt der er foregået mange mord, overfald, henrettelser uden rettergang og domfældelse i det sydlige Sri Lanka mellem de stridende parter, er lignende overgreb fortsat også i det nordlige Sri Lanka - her begået af De indiske Fredsbevarende styrker (IPKF). En sådan udåd fandt sted fra den 2. til den 4. august 1989 i Valvettitturai.
Det forlyder, at 6 indiske sikh soldater blev dræbt og 11 såret ved et baghold foretaget af de tamilske tigre (LTTE) om morgenen den 2. august. Nogle timer senere vendte de indiske soldater tilbage til Valvettitturai, som er kendt som et af tigrenes stærke tilholdssteder, og stormede vildt igennem byen og dræbte dusinvis af mennesker og satte ild til huse og ejendomme. Det skete ved 2 - 3-tiden om eftermiddagen. Straks efter blev byen spærret af, og i 2½ dag blev det forbudt for nogen at komme ind i byen - endog lægehold som skulle hjælpe sårede.
I de følgende dage kom forskellige forklaringer på episoden frem, i hvilke de indiske kommandoer prøvede at bortforklare, hvad der var sket. Faktum er at 46 uskyldige blev dræbt, dertil mange sårede. Rapporter, som Amnesty International har fået fra øjenvidner eller fra observatører, går ud på, at mange af ofrene var forsvarsløse og at de blev myrdet som gengæld for det baghold, som Tigrene foretog mod IPKF.
Der er eksempler på, at tamiler er blevet skudt og dræbt, da de med årmene i vejret kom ud af deres huse og nærmede sig de indiske soldater. Ligeledes skete mange henrettelser mens tamilerne skjulte sig i byens huse. Soldaterne trængte ind i husene og åbnede ild på de forsamlede mennesker..."Sammen med Vengadasalam Subramaniam blev otte andre dræbt i hans hus, heriblandt en 70-årig mand, to 11-års børn og en baby. "....."IPKF-soldater trængte ind i Shivaganeshans hus på Theeruvil gade ved 3.30-tiden om eftermiddagen. Folk fra området havde søgt beskyttelse i dette hus. Soldaterne skilte mænd fra kvinder og tog så 8 mænd med udenfor. De 8 mænd blev sat ned langs en mur og skudt. 4 af dem var straks døde; de øvrige blev bragt til hospitalet".

படிப்பகம்

www.padippakam.com



Den 16. august meddelte Ranjan Wijeratne at han havde diskuteret massakren i Valvettiturai med den indiske højkommissær i Sri Lanka. Denne lovede at efterforske det skete, men her i slutningen af december er der endnu intet sket.

GENGÆLDELDESMORD VED PUTTUR EAST.

Den 5. juni om morgenen fandt gengældelsesmord sted i Puttur East. 2 IPKF-soldater var blevet dræbt, og som det så ofte sker, kom soldaterne tilbage og dræbte civile.
Et overlevende øjenvidne beretter til Amnesty International:
"På ordre fra soldaterne søgte min familie sammen med andre fra landsbyen sikkerhed i Thakaram Pillayar templet...Kort efter kom soldaterne og begyndte at forulempe os og sætte ild til vore huse. Derefter trak de 8 ud af templet og skød dem ned lige for vore øjne...."

Dødstrusler udstedes regelmæssigt i det sydlige Sri Lanka af galvmilitære grupper. Siden midt-1989 er mange menneskerettighedsforkæmpere blevet dræbt eller tvunget til at forlade landet. Nogle er blevet i Sri Lanka men er gået under jorden på grund af dødstruslerne. Blandt disse er adskellige jurister, som har efterforsket soldaternes overgreb, efterlyst forsvundne mennesker efter anholdelser, osv. Også læger og journalister modtager ofte dødstrusler.
Trusler på livet over for jurister kommer fra mange forskellige grupper, og det kan undertiden være vanskeligt at stedfæste, hvem afsenderen af truslen er. Undertiden finder henrettelserne sted af uniformerede personer, som henvender sig på juristernes bopæl og skyder dem ned direkte. I andre tilfælde sker mordene på åben gade, udført af civilklædte personer, som straks forsvinder. Det sker ofte, at disse grupper eller personer over telefonen tager ansvar for mordene og samtidigt benytter lejoigheden til at udstede nye mordtrusler. Retsforfølgelse af disse personer eller af soldater fra sikkerhedsstyrkerne er meget vanskelige, idet vidner har stor chance for at blive dræbt, hvis de optræder som vidne i retssager imod morderne.
Læger, som uden at tage politisk stilling til, hvad der sker, men som udelukkende prøver at udføre deres gerning ud fra en lægelig og humanistisk holdning, lider ofte samme skæbne. Derfor er det særdeles vanskeligt at få lægelige vurderinger med i retsbehandlingen, hvor en sådan kan finde sted.

Endnu en kategori af mennesker, so udsættes for mordtrusler og mord, er lærere og universitetsfolk. Rajani Thiranagama, læge og lektor i anatomi ved Universitetet i Jaffna blev skudt og dræbt af en ukendt person. Sammen med

படிப்பகம்

www.padippakam.com



andre universitetslærere var Rajani Thiranagama medlem af Universitetslærere for Menneskerettighederne - en organisation, som rapporterede tilfælde af overgreb på menneskerettigheder begået af sikkerhedsstyrkerne og overgreb mod oppositionsgrupper i det nordlige Sri Lanka.
Hendes forældre berettede, at indiske soldater i flere tilfælde gennemsøgte hendes hus, bl.a. for at finde manuskriptet til The Broken Palmyra, et dokument som rapporterer om IKPF-soldaternes overgreb i Jaffna i oktober 1987. Hundreder af civile blev dræbt og sårede ved den lejlighed. I et brev til en ven i udlandet havde Rajani Thiranagama skrevet om hendes frygt for IPKF.

Som intellektuelle bliver udsat for mordtrusler, således også journalister og radiofolk. Statsradioen og statspressen er under kontrol og censur. I august blev formanden og generaldirektøren for Sri Lanka statsradioen skudt; kort tid efter skete det samme med chefredaktøren af det statsejede Rupavahini TV-selskab.
I Jaffne blev en 19-årig student, søn af udgiveren af den tamilsk-sprogede avis Murasoli dræbt ved tre skud i hovedet. Faktisk kom de fire bevæbnede mænd efter faderen, men denne opdagede, hvad der var på færde og sneg sig ud af huset. De bevæbnede jordere indledte en diskusion med studentens moder, men da han hørte det, og spurgte, hvad der foregik, blev han slæbt med udenfor og myrdet.

Amnesty International prøver at indsamle rapporter og beretninger om de ting, som foregår. Det sker dels ved øjenvidneberetninger, dels ved udsagn fra retssager, hvor det er muligt; dels modtager man rapporter fra observatører på forskellige steder i landet. Amnesty International prøver altid at få verificeret rapporterne, bl.a. ved at rapproter skal være forsynede med navne på vidner og personer, som udtaler sig, så de evt. kan spores med henblik på berigti gelse. Men det er særdeles vanskeligt at få objektive meldinger ud fra Sri Lanka, fordi der er så mange modstridene og militante grupper, som bekriger hinanden, ligesom de indiske fredsbevarende styrker spiller en helt uacceptabel rolle i Sri Lanka.

Dansk-Tamilsk Venskabsforening modtager regelmæssigt disse omfattende rapporter fra Amnesty International. Det er slet ikke muligt at videregive disse rapporter i fuldkommenhed, da de er omfattende. Imidlertid kunne vi håbe, at dansk presse ville interessere sig mere for forholdene i Sri Lanka end det sker i dag.

படிப்பகம்

www.padippakam.com



UDLÆNDINGELOVEN...§ 17.

Denne paragraf i udlændingeloven handler om, hvordan man kan miste opholdstilladelse i Danmark.

En udlændings opholdstilladelse i Danmark bortfalder:

1) hvis udlændingen opgiver sin bopæl i Danmark, melder sig fra folkeregistret og flytter til et andet land.

2) hvis udlændingen har opholdt sig i et andet land i en sammenhængende periode af mere end 6 måneders varighed.

Hvis en udlænding har boet lovligt i Danmark i mere end 2 år, vil opholdstilladelse først mistes, hvis udlændingen har opholdt sig uden for Danmarks grænser i en sammenhængende periode af mere end 12 måneder.

வெளிநாட்டவர்களுக்கான சட்டம்....17.

வெளிநாட்டவர்களிற்கான சட்டத்தின் இப் பிரிவில் எவ்வாறு ஒருவர் டென்மார்க்கில் தனது வசிப்புரிமையினை இழக்கமுடியும் என்பது பற்றிக் கூறப்படுகிறது.

ஒரு வெளிநாட்டவரின் வசிப்புரிமை டென்மார்க்கில் இல்லாமற் போவது –

1. அவ் வெளிநாட்டவர் டென்மார்க்கில் தனது வசிப்பிடத்தினை கைவிட்டு, மக்கள் பதிவேட்டிலிருந்து தனது பெயரினை எடுத்து விட்டு, இன்னுமோர் நாட்டிற்குச் சென்ருல்.

2. அவ் வெளிநாட்டவர் 6 மாதங்களுக்கு கூடுதலாக இன்னுமோர் நாட்டில் சென்று தங்கியிருத்தல்.

ஒரு வெளிநாட்டவர் சட்டபூர்வமாக டென்மார்க்கில் 2 வருடங்களுக்கு மேல் வசித்திருந்தவராயின், அவர் டென்மார்க் எல்லையைத் தாண்டி இன்னுமோர் நாட்டில் 12 மாதங்களுக்கு மேல் தங்கியிருந்தால் அவருடைய வசிப்புரிமையை அவர் இழக்கிருர்.



ஓவியம்:
கோ. கைலாசநாதன்

படிப்பகம்

# 8

## SID தொழிற்சங்கத்தின் அறிவித்தல்

1. நீர் எப்படி இச் சங்கத்தில் அங்கத்தவராக முடியும், அத்தோடு எவ்வாறு வேலை-யிழந்திருப்பவருக்கான நிதியத்தில் சேர முடியும் என்பது பற்றியது:

நீர் வேலைக்குச் சேர்ந்த முதல் நாளே அங்குள்ள தொழிற்சங்கப் பிரதிநிதி-யுடனோ அல்லது அந்த உள்ளூர் சங்கக் கிளையுடனோ நீர் தொடர்பு கொள்ள வேண்டும்.

நீர் முழு நேர வேலை செய்பவராகவும், அதேவேளை நீர், உம்மை முழு நேர அங்கத்தவராகவும் இச்சங்கத்தில் பதிய இருப்பின், 10 கிழமையில் 300 மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்ய வேண்டும்.

நீர், உம்மை அரைநேர அங்கத்தவராக சேர விரும்பின் 10 கிழமைக்குள் 150 இலிருந்து 300 மணித்தியாலங்கள் வரை வேலை செய்தல் வேண்டும். இது பற்றிய மேலதிக விபரம் தேவைப்படின், உமது உள்ளூர் SID கிளையில் கதைக்க முடியும்.

2. வேலையில்லா உதவிப் பணம்/ சுகயீன லீவு உதவிப் பணம் பெறும் உரிமை:

நீர் ஒரு வருட காலம் இச் சங்கத்தில் அங்கத்தவராகவும், இக் காலத்தில் 988 மணித்தியாலங்கள் வேலை செய்திருப்பின், உமக்கு வேலையில்லா உதவிப் பணம்/ சுகயீன லீவு உதவிப் பணம் பெறும் உரிமை உண்டு. நீர் உம்மை அரை நேர அங்கத்தவராகப் பதிந்திருப்பின் இக் காலத்தில் 646 மணித்தியாலங்கள் வேலை செய்திருக்க வேண்டும்.

3. வேலை முடிவடைதல்:

அதாவது, உமது வேலைத்தலத்தில் சக வேலையாட்களுடன் தொடர்ந்து வேலை செய்ய முடியாது விடின், அல்லது அவை போன்ற பிரச்சனைகளால் வேலை செய்யக் கஸ்டமாயிப்பின் உடனடியாக உமது SID கிளையிடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

ஏதாவது பல காரணங்களுக்காக நீரகவே உமது வேலையை விட்டு நீங்கின் முதல் 5 வாரங்களுக்கு உமக்குரிய உதவிப் பணம் வழங்கப்பட மாட்டாது.

பின்வரும் காரணங்களுக்காக நீர் வேலையிலிருந்து நீக்கப்பட்டால் உமது SID கிளையுடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

* வேலைத்தளம் மூடப்படல்.
* வேலைத்தளத்தில் வேலையாட்களை மட்டுப்படுத்தல்.
* வேலைத்தளத்தில் வேலை குறைவாக இருத்தல்.
* அங்கு வரும் ஓடர்கள் குறைவாயிருத்தல்.

* வேலைத்தளத்தில் புதிய உற்பத்தி முறையில், உம்மை அங்கு அமர்த்துவதில் பிரயோசனம் இல்லையெனத் தோன்றல்.

4. வேலைக்கு மறுத்தல்.

உமக்குத் தரப்பட்ட வேலையை ஏற்க மறுத்தால் அல்லது வேலைக்குப் போ-காது விட்டால் உமது 2 வார உதவிப்பணம் நிற்பாட்டக்கூடும். இதற்கும் நீர் உமது SIDகிளையுடன் தொடர்பு கொள்ளவும்.

மீண்டும் மீண்டும் ஒரே வழியில் நடத்தல்.

நீர் 12 மாதங்களில் 2 முறை தவறு செய்ததாகத் தெரியின் உதவிப்பணம் பெறும் உரிமையை இழப்பீர். நீர் மேலும் 5 கிழமைகள் தொடர்ந்து வேலை செய்தல் வேண்டும்.

நீர் வேலையை இழந்தால்

நீர் உமது வேலையிலிருந்து நீக்கப்பட்டவுடன், முதலாவது நாளில் தொழித்-திணைக்களத்திற்குப் போதல் வேண்டும். அங்கு உமக்கு உதவிப் பண அட்டை ஒன்று வழங்குவார்கள். தொழிற் திணைக்களத்திற்குப் போனபின் உமது SID கிளையில் தொடர்பு கொள்ள வேண்டும்.

நீர் உமது வரவு ஒழுங்கு பற்றிய பத்திரம் ஒன்றை நிரப்புதல் வேண்டும். அத்தோடு நீர் வேலைக்குத் தயாராக இருக்கின்றீர் என்று பெற்ற ஒரே பத்திரமும் வேண்டும். அதாவது நீர் ஒரு வருட அங்கத்துவத்தை முடித்திருப்பின் மாத்திரமே இவை தேவைப்படும். உம்மை வேலையிலிருந்து நீக்கிய கடிதத்தையும் காட்டுதல் வேண்டும். அதில் உம்மை நீக்குவதற்குக் கூறிய காரணம், திகதி என்பன சுட்டப்பட்டடி-யான முறையில் இருத்தல் வேண்டும்.

கடந்த 7 மாதங்களிற்குரிய சம்பளப் பட்டியல் காட்டுதல் வேண்டும்.

உமது வரவு ஒழுங்கு என்பவற்றுக்கமைய உமது சம்பளமும் சரியானதாயிரு-த்தல் வேண்டும்.

வரி வசூல் அத்தாட்சிப் பத்திரம் கொண்டு வருதல் அவசியமாகும்.

மேற் கூறியவற்றுடன் உமது பணத்தை எந்த வங்கி மூலமாகப் பெற விரும்பு-கின்றீர் என்பதற்கான அறிவுறுத்தல்களையும் தருதல் வேண்டும்.

5. வேலையில்லா உதவிப் பணம்.

வேலையில்லா உதவிப் பணம் எனும் போது கடைசி 12 வார அல்லது 3 மாத வருமானத்தின் சராசரியின் 90%மே வழங்கப்படும். இதுவே ஆகக் கூடிய தொகையாகும். கிட்டத்தட்ட, ஒரு நாளிற்குரிய ஆகக்கூடிய தொகை 389.00 குரோனர் ஆகும். புதிதாகக் கற்று வந்தவர்களிற்கு, வருமானத்தில் 80% ஆகக்-கூடிய வேலையில்லா உதவிப் பணமாகக் கொடுக்கப்படும்.

6. பணக் கொடுப்பனவு.

நீர் நிரப்பிக் கொடுத்த உதவிப்பண அட்டை முடிவடைந்த காலத்திற்கு அடுத்த திங்கட்கிழமை உமது அடுத்த அட்டை உமது கிளையில் இருக்க வேண்டும். நீர் நிரப்பிக் கொடுத்த உதவிப்பண அட்டை சரியெனக் காணப்பின், அடுத்த வெள்ளிக்கிழமை உமக்குரிய பணம் வங்கியிலிடப்படும்.

உமது வரி வசூல் அத்தாட்சிப் பத்திரத்திற்கு அமையவே வரி கணிக்கப்படும். அங்கு உமது வரி வசூல் அத்தாட்சிப் பத்திரம் இல்லாவிடின் 50% வரி அறவிடப்படும்.

உமது சந்தாப் பணத்தில் நீர் நிலுவை வைத்திருக்கக்கூடாது என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும்.

7. நீர் வேலைக்குத் தயாராயிருக்கும் போது (வேலையில்லாமல் இருக்கும் போது)

பின்வரும் ஒழுங்குகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

அ. வேலை தேடுதல். – தேடும் போது நீர் வேலைக்குத் தயாராக இருக்கிறீர் என்பதனை அவர்களிற்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

ஆ. தொழில் திணைக்களத்தில் உமக்குரிய திகதியில் தவறாது சமூகமளித்தல் வேண்டும்.

இ. உமது உதவிப் பண அட்டையை ஒழுங்காக நிரப்பி உரிய நேரத்தில் கையளிக்கவும்.

ஈ. உமக்கு சுகயீனமெனின் தொழில் திணைக்களம், மற்றும் சுகயீன லீவு உதவிப் பணக் கந்தோர் மற்றும் வேலையிழந்தோர் உதவிப் பணக் கந்தோர் என்பனவற்றிற்கு அறிவிக்க வேண்டும். உமக்குரிய சுகயீன உதவிப் பணத்தை SID ஒழுங்கு செய்யும். நீர் சுகமடைந்தவுடன் தொழில் திணைக்களத்திற்குச் செல்லுதல் வேண்டும். அங்கு உம்மை மீண்டும் பதிந்து கொள்வதுடன், உமது SID கிளைக்கு வைத்தியக் காப்புறுதியில் இருந்து பெற்ற பணத்தை ஆதாரத்துடன் செலுத்த வேண்டும்.

உ. உமக்கு ஏதாவது வேலை கிடைத்தால் (குறைந்த வேலையாயிருந்தாலும்) இது பற்றி தொழில் திணைக்களத்திற்கும் உமது SID கிளைக்கும் அறிவிக்கவும். மீண்டும் நீர் வேலையிழந்தால் அது பற்றியும் மீண்டும் அறிவித்தல் வேண்டும்.

ஊ. நீர் விடுமுறை பெற விரும்பின், நேர காலத்துடன் உமது SID கிளைக்கும் தொழில் திணைக்களத்திற்கும் தெரிவித்தல் வேண்டும்.

எ. உமது விலாசத்தை மாற்றியிருப்பின் அவை பற்றியும் உடன் அறிவித்தல் வேண்டும்.

ஏ. உமக்கு ஏதாவது விளக்கக் குறைவுகள் இருப்பின், உமது SID கிளையுடன் தொடர்பு கொள்ள முடியும்.

www.padippakam.com



## அரச விடுமுறைகளிற்குரிய கொடுப்பனவு சம்பந்தமான விசேட சட்டம்.

அரச விடுமுறைகளிற்கு SID பணம் வழங்கவேண்டுமேயானல் குறைந்த பட்சம் ஒரு கிழமை அதாவது விடுமுறைக்குப் பின்னரோ அல்லது முன்னரோ வேலைக்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

### விசேட சட்டங்கள்

சில அங்கத்தவர்களிற்காக SID விசேட சட்டங்களை உருவாக்கியுள்ளது. வெளி நாடுகளுக்கு பொருட்களை ஏற்றிச் செல்லும் சாரதிகள், மீனவர்கள், துறைமுக ஊழியர்கள் என்போருக்கே இவ் விசேட சட்டங்களாகும்.

மேலதிக விபரங்கட்கு SID யுடன் தொடர்பு கொள்ளவும்.

### விடுமுறை

நீர் விடுமுறை பெற விரும்பின் 14 நாட்களுக்கு முன் தொழில் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

### விடுமுறைக்கான பணம்

ஒருவர் 30 நாட்கள் வருடத்தில் விடுமுறை எடுக்க முடியும். நீர் உழைக்காத போதிலும் வேலையிழந்தோர் உதவிப் பண மூலமாக அதற்குரிய பணத்தைப் பெற முடியும்.

### கீழ்க்காணும் முறையில் உமது வேலையில்லா உதவிப் பண அட்டை நிரப்பப்படல் வேண்டும்

1. ஒரு கிழமைக்கு முன்பு உமக்கு உதவிப் பண அட்டை கிடைக்காமல் இருந்திருந்தால், நீர் நாளந்தம் வேலை செய்யும் மணித்தியாலங்களை 1 என அடையாளமிடப்பட்ட கூட்டுக்குள் எழுத வேண்டும்.
2. 2 என அடையாளமிடப்பட்ட கோட்டினுள், நீர் வேலை செய்த மணித்தியாலங்கள், சுகயீனம் அல்லது வேறு காரணங்களால் வேலைக்குப் போகாமல் சம்பளம் பெற்ற மணித்தியாலங்கள் யாவற்றையும் எழுதுதல் வேண்டும்.

   அட்டையின் முன் பக்கத்தை வாசிக்கவும்.
3. மீனவர்கள், வெளி நாடுகளிற்கு பொருட்களைக் கொண்டு செல்லும் சாரதிகள், வாடகைக் கார் சாரதிகள், பிரத்தியேகத் தொழில் செய்பவர்கள் போன்றோர் தமது நாளாந்த வருமானம், வாராந்த வருமானம் என்பவற்றை 3 என இலக்கமிடப்பட்ட கோட்டினுள் எழுதுதல் வேண்டும்.

4. வேலையில்லா உதவிப் பண அட்டையில் 4 என இலக்கமிட்டுள்ள இடத்தில் திகதி-யிடும் போது, மேலே ஞாயிற்றுக் கிழமை வரையும் என்ற இடத்தில் குறிப்பிட்ட திகதியையே எழுதுதல் வேண்டும்.

5. "5" என இலக்கமிடப்பட்டுள்ள இடத்தில் கையொப்பமிடுக.

6. நீர் முழு நேர வேலையாளரா அல்லது பகுதி நேர வேலையாளரா என்பதனை, 6 என இலக்கமிட்டுள்ள கூட்டினுள் X மூலம் காட்டுக.

7. உமது ஆள் பதிவு இலக்கத் (மத்திய)தை எழுதவும்.

8. நீர் வேலை செய்திருந்தால், உமது தொழில் அதிபருடைய பெயர், விலாசம் என்பவற்றை (இல.8 இனுள்) எழுதுக.

9. உமது பிரத்தியோகத் தொழில் பற்றிய சனி, ஞாயிறு உட்பட நேரங்கள், வரு-மானங்கள் யாவற்றையும் (இல.9 இனுள்) எழுதுக.
குறிப்பு. நீர் உமது லீவு நாட்கள், சுகயீன லீவு நாட்கள் என்பவற்றைக் குறிப்பி-ட்டு, சரியான முறையில் படிவம் நிரப்பப்படாவிட்டால், உமக்கு பணம் கொடுக்கப்-பட மாட்டாது.

காலநிலை சீர்கேடு/மூலப்பொருட் பற்றுக்குறை

1. காலநிலை சீர்கேடு காரணமாகவோ அல்லது மூலப்பொருள் பற்றுக்குறை காரண-மாகவோ நீர் வேலையில்லாமல் இருந்தால், அல்லது உமது வேலை நேரப் குறைக்கப்பட்டிருந்தால், நீர் 4 நாட்களுக்கிடையில் தொழில் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளல் வேண்டும். மேற்கூறிய காரணங்களால் நீர் வேலையில்லா-மல் இருப்பதற்கு ஒரு நாளிற்கு முன்பு தொழில் வழங்குனர் இது பற்றி உமக்கு அறிவிக்க வேண்டும்.

2. நீர் தொழில் திணைக்களத்தில், உமது 8 கிழமைக்குரிய உதவிப்பண அட்டையையும், மீண்டும் வேலைக்கு தொடங்க வேண்டிய அறிவித்தலையும் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்பாக, அதாவது மேற்கூறிய காரணங்களால் தொடர்-ந்து 3 நாட்கள் வேலையற்று இருந்தாலும் கூட வேலை ஸ்தலத்திற்கு சமூகமளித்தல் அவசியமில்லை.

காலநிலை சீர்கேடு அல்லது உற்பத்திப் பொருட் பற்றுக்குறை காரணமாக 3 நாட்களிற்கு குறைவாக வேலையற்று இருந்தாலும் கூட, நீர் குறிப்பிட்ட திகதியில் கட்டாயமாக சமூகம் கொடுக்க வேண்டும். வேலை வழங்குபவர் கட்டாயமாக, வேலையற்ற காரணத்தை உமது உதவிப் பண அட்டையில் எழுதி கையொப்பமிடுவார்.

உம்மிடம் உதவிப் பண அட்டை இருக்கும் போதும், காலநிலை சீர்கேட்டாலோ அல்லது மூலப்பொருட் தட்டுப்பாட்டாலோ 4நாட்கள் வேலையற்றிருந்தாலும் தொழில் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

www.padippakam.com



3. வேலை வழங்குபவர் உமது உதவிப் பண அட்டையில் நாளாந்தம் கையொப்பமிடுவதுடன், வேலையில்லாத காரணத்தையும், காலநிலை சீர்கேடு எனின் V எனவும், மூலப்பொருட் பற்றாக்குறையெனின் "M" எனவும் குறிப்பிட்டுக் காட்டுவார்.

4. மூலப்பொருட் பற்றாக்குறை அல்லது காலநிலை சீர்கேடு காரணமாக வேலையற்று இருந்தபோது ஒரு கிழமையில் 30 மணித்தியாலங்களிற்கு மேல் வேலை செய்திருந்தால் நீர் உதவிப்பண அட்டையை எடுக்கும் உரிமையை இழக்கின்றீர்.

5. மூலப்பொருட் பற்றாக்குறை அல்லது காலநிலை சீர்கேடு காரணமாக நீர் வீட்டுக்கு அனுப்பப்பட்டு, மீண்டும் அதே தொழிற்சாலைக்கு உம்மை வேலைக்கு ஏற்றுக் கொள்ளாவிட்டால், அதற்குரிய காரணம், அதாவது உம்மை வேலை நீக்கியதற்குரிய காரணங்கள் எழுதப்பட்ட கடிதம் உமக்கு கிடைக்கப்பட வேண்டும்.

## அங்கத்தவரின் கடமைகள்

நீர் வேலையற்றிருக்கும் போது, நீர் என்ன செய்கின்றீர் என்பது பற்றி தொழில் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அறிவிக்கத்தவறின் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

## பயிற்சி நெறி/கல்வி

நீர் SIDயில் அங்கத்தவராக இருக்கும் பொழுது ஏதாவது பயிற்சி நெறிக்குச் செல்ல முடியும். உ.ம். மேலதிக(விசேட) தொழிற் பயிற்சிப் பாடசாலை, அங்கு நீர் சம்பளமும் பெற முடியும்.

நீர் வேலையற்றிருக்கும் போது அதாவது வேலையில்லா உதவிப் பணம் எடுத்துக் கொண்டு பின்வரும் ஏதாவது கல்விநெறிகளை மேற்கொள்ள முடியும்.

உயர்கல்வி, H.F வகுப்பில் ஏதாவது பாடத்தை வாரத்தில் 20 மணித்தியாலத்திற்கு குறைவாக, அல்லது 9ம், 10ம் தரக்கல்வி அல்லது வேறு ஏதாவது கல்வி. ஆனால் இவை அரச நிதியுதவிக் கல்வியாக இருக்க வேண்டும்.

நீர் ஏதாவது கல்வியை தொடர முன் SIDயுடன் தொடர்பு கொண்டு ஆலோசனை செய்தல் வேண்டும்.

## புகார் செய்தல்

உமது SIDசினை, உம்மை வழி நடத்தும் முறை தவறு எனக் கருதினால் அல்லது உமக்கு வேலையற்றிருக்கும் பொழுது பணம் தருவதில் ஏதாவது பிரச்சனைகள் தோன்றினால் நீர் அது பற்றிக் கீழ்க் காணும் விலாசத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்க முடியும்.

www.padippakam.com




விலாசம்

Specialarbejdernes Arbejdsløshedskasse
Postbox 272
I50I København V

## இன்னோர் கிளைக்கு மாறுதல்/ வேறோர் சங்கத்திற்கு மாறுதல்

நீர் ஒரு SID கிளையில் இருந்து வேறு ஓர் கிளைக்கு மாற வேண்டுமானால், நீர் A.L.53 என்னும் படிவத்தை நிரப்புதல் வேண்டும். இதனை நிறைவு செய்த பின் நீர் உமது புதிய கிளையுடன் விரைவில் தொடர்பு கொள்ள வேண்டும்..

உமக்கு, SID சங்கத்தில் சேரமுடியாத வேறோர் வேலை கிடைத்தால், நீர் அவ்வேலைக்குரிய வேறோர் சங்கத்தில் சேர வேண்டும்.



தோழியின் குரல்

ஓவியம்: கே.கிருஷ்ணராஜா

படிப்பகம்

www.padippakam.com







Mette Frøkjær og Mette Pedersen er lærerstuderende på Herning Seminarium. De går begge i IV. årgang og afslutter studierne til sommer.
Som emne for deres afsluttende opgave i pædagogisk speciale valgte de at arbejde med fremmedsprogede elever i folkeskolen. Det er et krav ved udarbejdelse af opgaven, at der er kontakt til eller interviews med personer. som har primær erfaring på området. Derfor har bl.a. tamiler været inddraget i opgaven...I det følgende korte synspunkter fra opgaven.

Vi valgte at arbejde med fremmedsprogede elever med den begrundelse, at vi gennem de sidste år har fået et stigende antal "nye danskere" her i landet, og at vi ikke har fundet tilfredsstillende løsninger i forbindelse med indvandrere, som for manges vedkommende har været her i landet i mere end 15 år.
Vi ser på sådanne problemer - ikke som isolerede problemer for flygtninge eller indvandrere men - som problemer, der skal løses i fællesskab.

Da folkeskolen er et godt spejl af samfundet, er det en god basis, hvor man gennem viden, forståelse og handlingskompetance kan opnå forbedringer.
Jamen, er der da problemer? Danmark er da et demokratisk land! - Ja, vel er det det, men måske er det netop i kraft af demokratiet muligt og let at camouflere negative holdninger som tale og ytringsfrihed i et demokratisk samfund.

Allerede før vi startede på opgaven, kunne vi pege på racisme som et nøglebegreb. Ethvert barn i Danmark ville kunne gøre det samme. Vi kunne bl.a. blot læse Herning Folkeblad eller se TV-avisen.
Hvad der ligger til grund for denne racisme er svært at konkretisere. Vi mener, at en væsentlig faktor er den samfundsmæssige udvikling, vi har haft i de seneste år. En af følgerne er et øget økonomisk pres inden for mange grupper i samfundet.

படிப்பகம்

www.padippakam.com



Dette pres bevirker, at mange ser "fremmede" som en trussel mod egen velstand i stedet for at se de egentlige årsager til problemerne.

Som tidligere nævnt har medierne også en forstærkende virkning, f.eks. var der i 1987 5743 iranere i Danmark. I de førende aviser blev der samme år skrevet over 6000 artikler om iranere. Hermed være ikke sagt at alle artikler var med racistiske undertoner, men at enkeltstående uheldige hændelser ofte blæses op af den sensationshungrende presse.

Der er en udbredt opfattelse i hele verden om retten til at kanøfle den, som ser anderledes ud - tænk blot på H.C.Andersens eventyr "Den grimme ælling". Selvfølgelig er der indlysende forskelle nationaliteterne imellem både med hensyn til udseende og kultur, men det er jo netop den ressource, som vi danskere kunne udnytte positivt i samme grad, som vi kræver, at andre skal tage ved lære af os. Derfor mener vi, at situationer, hvor man mødes på lige fod, er nødvendige for forståelse og tolerance nationerne imellem. Her taler vi ikke kun om fine kulturelle, plan½agte arrangementer, men også om samvær på arbejdspladser, i skoler og små tilfældige møder i hverdagen.

Dette kan munde ud i pluralistisk samfund, hvor hver enkelt tager egen kultur op til revision ud fra et kendskab til andre kulturformer.

Fra interviews såvel som fra praktikophold i skoler ved vi, at skolerne mange steder står på bar bund m.h.t. de mange elever af forskellig nationalitet. Lærerne har ingen teoretisk eller praktisk viden på området, og materialemæssigt er der ikke megen hjælp at hente, f.eks. findes der ikke engang ordbøger til mange forskellige sprog.
Derfor kan det være tidkrævende at tage de nødvendige hensyn til denne elevgruppe. I langt de fleste tilfælde er man nødsaget til selv at fremstille stort set alle undervisningsmaterialer selv. Dette er rent praktisk en uholdbar situation, og man ser da også i statistikkerne, at indvandrerbørnene gennemsnitligt har en kortere skolegang end de danske børn.

Man kan konkludere, at det danske skolesystem ikke har været helt klar til modtagelse af denne elevgruppe, og at man mange steder prioriterer den lavt. Som eksempel kan nævnes modersmålsundervisningens vilkår. Denne undervisning lægges iflg. loven i ydertimer eller på lørdage; undervisningsmaterialerne er få og af dårlig kvalitet; der findes ingen overordnet læseplan, og det er ofte svært at finde en kvalificeret lærer bosiddende i landet.

படிப்பகம்


www.padippakam.com



Vi mener, at modersmålsundervisningen er meget vigtig, da den danner grundlaget for barnets videre personlighedsudvikling. Rent praktisk er et dybtgående kendskab til egen kulturbaggrund vigtig for en vellykket integration i et andet land. På den måde får den enkelte mulighed for at vælge det, han ønsker at bevare fra den oprindelige kultur, og at vælge det, han ønsker at tilegne sig fra den nye kultur.

Dette er ganske kort nogle af de problemstillinger, vi har arbejdet med i vores opgave. Vi har ikke forsøgt at give nogle endegyldige svar da vi mener at det er umuligt. Man er nok nødt til at tage stilling selv i hvert enkelt tilfælde og handle ud fra egne og andres erfaringer. Fra politisk side kunne vi ønske os nogle klarere og bedre rammer for arbejdet med fremmedsprogede elever i folkeskolen.

Mette Frøkjær - Mette Pedersen.



படிப்பகம்

www.padippakam.com



# KULTURUGE I 1990 ?

For året 1990 har Socialministeriet 10 mill kr til rådighed for aktiviteter, der fremmer kontakt og forståelse mellem indvandrere, flygtninge og danskere. Det drejer sig dels om landsdækkende, dels lokale initiativer.

En række fagforeninger og venskabsforeninger i Herningområdet, herunder Dansk-Tamilsk Venskabsforening, har i de sidste par måneder arbejdet med planer om en stor kulturuge i maj. En ansøgning om økonomisk bistand er nu afgået til Socialministeriet, og vi håber, der snart kommer svar.


I den pågældende uge vil der hver dag være flere arrangementer. Det kan være en sportskamp, undervisning i folkedans eller madlavning, informations- og kulturaften ved de enkelte landes repræsentanter, aktiviteter for børn og meget, meget andet. Det er her meningen at inddrage en række lokale foreninger, og det er vores håb, at der på den måde skabes kontakter mellem danskere og udlændinge. Lørdag aften sluttes der af med en stor fest med udenlandsk og dansk servering og optræden.

Det hele afhænger naturligvis af, om vi får bevilliget penge, og om der er lokal opbakning bag projektet. I positivt fald håber vi på din aktive medvirken.

Nærmere oplysninger vil blive givet i de følgende numre.

Med venlig hilsen

Søren Nissen



படிப்பகம்

www.padippakam.com



# Træffe-tid hos udvalgs-formanden




**Socialudvalgets formand, Troels Johansen, har fast træffetid den 1. og 3. torsdag i måneden fra kl. 15,30-16,30 - efter forudgående aftale.**
**Du kan ringe og aftale nærmere tid på socialforvaltningens sekretariat, tlf. 97 21 20 00, lokal 3001 eller 3003.**

Mange mennesker har vanskeligt ved at skrive til forvaltninger og offentlige kontorer på Rådhuset. Derimod er det ikke så svært at forklare om sine problemer, hvis det kan ske mundtligt i samtaleform. For at gøre det så nemt som muligt for borgerne at få hjælp til de problemer, de måtte have, tilbyder formanden for socialudvalget, at borgere med problemer kan komme til en samtale på socialudvalgsformandens kontor .
Hvis I har problemer, som I kunne ønske at drøfte med socialudvalgsformanden, kan I ringe til Rådhuset, som det står i annoncen ovenfor, og bestille tid til en samtale. - Gør brug af denne mulighed, hvis der er problemer.

::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::

உங்களில் பலருக்கு, உங்கள் பிரச்சனைகளை, நகரசபை மண்டபத்தில் அமைந்திருக்கும் நிர்வாக சபை அலுவலகங்களுக்கு எழுதுவது கடினமாக இருக்கலாம். ஆனால் உங்களிற்கு இதனை ஒரு பேச்சு வார்த்தையின் மூலம் தீர்த்துக்-கொள்வது என்பது மிகவும் எளிதானதாகும். எனவே நீங்கள் சமூக நிர்வாக சபையின் தலைவரை, அவரது அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்து, உங்கள் பிரச்சனைகளை எடுத்துரைத்து, அதற்கான பலாபலன்களை பெறக் கூடிய வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.

உங்களுக்கு ஏதாவது பிரச்சனை இருந்தால், அதனை நீங்கள் சமூக நிர்வாக சபையின் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாட விரும்பினால், மேலே தரப்பட்டிருக்கும் அறிவித்தலின் பிரகாரம், ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒழுக்கி, அவருடன் கலந்துரையாடி உங்கள் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளலாம்.



படிப்பகம்

www.padippakam.com



சிங்கள தமிழ் அரசியல்வாதிகளிடையே காலத்துக்குக் காலம் இடம் பெற்ற ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள் உறுதி மொழிகள் தீர்மானங்கள் என்பன அதே சிங்கள அரசியல்வாதிகளால் மீறப்பட்டும் நடைமுறைப் படுத்தாதும் கிழித்தெறியப்பட்டதுமான வரலாற்றை இலங்கைச் சரித்திரம் கூறும். இத் துரோக வரலாற்றினை 1968ம் ஆண்டு பாராளுமன்றத்தில் இடம்பெற்ற மாவட்டசபை மசோதா பற்றிய வெள்ளை அறிக்கைமீதான விவாதத்தின்போது வ.நவரெத்தினம் (பாராளுமன்ற உறுப்பினர்-ஊர்காவற்றுறை) எடுத்துரைத்தார். இவ் உரை பின்பு 'ஒப்பந்தங்கள் வேண்டாம்' என்ற நூலாக வெளியிடப்பட்டது. நமது இளைய பரம்பரையினருக்கு இவ் வரலாற்றினைக் கூறவேண்டிய அவசியம் இன்றிருப்பதால் ஒப்பந்தங்கள் பற்றிய முதல் ஐந்து பகுதிகளை இந்நூலிலிருந்து நன்றியுடன் எடுத்துப்பிரசுரிக்கின்றோம்.

# வேதாளம் பழையபடி முருக்க மரத்தில் ஏறிய கதை

வ. நவரெத்தினம்

## கதை ஒன்று

சிலோன் நாஷனல் காங்கிரஸ் 1919ம் ஆண்டில் நிறுவப்பட்டது. அதன் முதலாவது தலைவராக சேர் பொன்னம்பலம் அருணாசலம் தெரிவு செய்யப்பட்டார்.

காங்கிரசை ஸ்தாபித்த சிறிது காலத்தில் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதுதான் முதலாவது சிங்கள- தமிழ் ஒப்பந்தம். திரு. ஜேம்ஸ் பீரீஸ், திரு. ஈ.ஜே. சமர விக்கிரம கே.சி ஆகிய இருவரும் சிங்களவர் பக்கமாகவும், சேர்.பி.அருணாசலம் தமிழர் பக்கமாகவும் சேர்ந்து செய்துகொண்ட ஒப்பந்தம் அது. அதன் சரத்துக்கள் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் சட்டசபையின் அங்கத்துவம் பற்றியதாக இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்.

கடந்த 50 வருஷங்களாகச் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் எல்லாம் இந்த சட்டசபைப் பிரதிநிதித்துவத்தைப் பற்றியனவாகவே காணப்படுகின்றன. சரித்திரக் கண்ணோட்டத்துடன் பார்த்தால் காரணம் புலப்படாமல் இல்லை. சிங்களத் தலைவர்கள் தமது சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் சட்ட சபையில் கூடிய பலம் கேட்டார்கள். தமிழ்த் தலைவர்கள் தங்கள் மக்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருக்கிறபடியால் பாதுகாப்புத் தரக்கூடிய பிரதிநிதித்துவம் கேட்டார்கள். எனவே இந்தப் போட்டி, இந்தப் பூசல் 50 வருஷங்களாக சோல்பரி கமிஷன் இலங்கைக்கு வரும்வரை தொடர்ந்தது. சரித்திரத்தைப் பார்த்தால் காரணம் இல்லாமல் இல்லை. மேற்கத்தைய வல்லரசுகள் இந்த நாட்டில் இருந்த இராச்சியங்களை வெவ்வேறாகக் கைப்பற்றினார்கள். வடக்குக் கிழக்கிலிருந்த தமிழ் இராச்சியத்தை ஒரு காலத்திலும், தென்னிலங்கையில் இருந்த சிங்கள இராச்சியங்களை வேறுவேறு காலங்களிலும் கைப்பற்றி பின்பு நிர்வாக வசதிக்காக ஒன்றாக இணைத்தார்கள். இப்படி இணைக்கப்பட்டதனால் தாம் சிறுபான்மையினராக ஆகிவிட்டதைக் கண்ட தமிழர், ஒரு இனம் மற்ற இனத்தின்மீது ஆதிக்கம் செலுத்த முடியாதவாறு தமக்குப் பாதுகாப்புத் தேடினார்கள். இதனால் எழுந்ததுதான் இந்தப் பிரதிநிதித்துவம் பற்றிய போட்டி.

திரு. ஜேம்ஸ்பீரீஸ் திரு.சமரவிக்கிரம ஒரு பக்கமாகவும், சேர் அருணாசலம் மறுபக்கமாகவும் முடித்துக்கொண்ட ஒப்பந்தம் மேல்மாகாணத்துத் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தைப் பற்றிய உடன்படிக்கையாகும். கடைசியில் நடந்தது என்ன? எந்தவிதமான மரியாதையும் காட்டாமல் கிழித்து எறியப்பட்டது. இலங்கைக்கு அரசியல் சீர்திருத்தங்கள் கேட்பதானால் எல்லா இனங்களும் ஒற்றுமையாகக்

www.padippakam.com



கேட்கவேண்டுமென்று இங்கிலாந்து நிறுத்திப்பிடித்த காலம்அது. இங்கிலாந்துக்குக் காட்டுவதற்காகவாவது இணக்கத்தை ஏற்படுத்த முயற்சித்தார்கள் தலைவர்கள். ஆனால் காங்கிரசுக்குள் உள்ளேயே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை நிராகரிக்கப்பட்டது. அதற்குச் சொல்லிய காரணத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும். 1921இலோ 1922இலோ காங்கிரஸ் மகாசபை கூடியது. அதற்குத் தலைமை தாங்கிய திரு.எச்.ஜே.சி.பெரேரா தலைமையுரை நிகழ்த்தினார். அந்தத் தலைமையுரையில் காரணம் கூறப்பட்டுள்ளது. 'திருவாளர்கள் ஜேம்பீரீஸ்.சமரவிக்கிரம ஆகிய இருவருக்கும் சேர். பொன்னம்பலம் அருணாசலத்துக்குமிடையில் ஒப்பந்தம் செய்துகொண்டது உண்மைதான். ஆனால் அந்த ஒப்பந்தம் எங்களைக் கட்டுப்படுத்தாதென்று நாங்கள் கருதுகிறோம்.சேர் பொன்னம்பலம் அருணாசலமும் அவரது சகாக்களும் காங்கிரசிலிருந்து வெளியேறிவிட்டார்கள்தான். அதற்கு நாங்கள் என்ன செய்வது?' என்றார் காங்கிரஸ் தலைவர். காலஞ்சென்ற பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர் டி. பண்டாரநாயக்கா 'சிலோன் நாஷனல் காங்கிரசின்' கைப்புத்தகம் என்று ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார். அக்காலத்தில் அவர் காங்கிரஸ் துணைக்காரியதரிசியாக இருந்தவர். அந்தப் புத்தகத்தில் 243ம் பக்கத்தில் காங்கிரஸ் தலைவர் எச்.ஜே.சி. பெரேராவின் தலைமையுரை காணப்படுகிறது. அதிலே காரணத்தை மேலும் விளக்கிக்கூறும் பகுதியை வாசித்துக்காட்ட விரும்புகிறேன்.

'அமைதியையும் பரஸ்பர சௌஜன்யத்தையும் ஏற்படுத்துவதற்காக என்றிருக்கலாம், அல்லது அரசியல் காரணங்களுக்காக என்றிருக்கலாம், ஆனால் பரிசுத்தமான உள்ளக்கருத்தோடும் ஒருமைப்பாட்டை நிலைநாட்டும் எண்ணத்தோடும் தனிப்பட்ட அங்கத்தவர் சிலர் வடபகுதி நபர்களோடு சேர்ந்து சில சமரச உடன்படிக்கைகளைச் செய்திருக்கலாம். ஆனால் காங்கிரசுக்கு நான் மீண்டும் சொல்லுகிறேன். காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்துக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது.'

இப்படியாகத்தான் காரணம் சொல்லப்பட்டது. தனிப்பட்டவர்களுக்கிடையில் செய்யப்பட்ட ஒப்பந்தம், அது காங்கிரசைக் கட்டுப்படுத்தாது, எனவே கிழித்து வீசப்பட்டது. அந்தக் காலத்திலும்கூட இந்தப் பயம் ஒரு இனம் மற்ற இனம் மீது ஆதிக்கம் செலுத்தப் போகிறது, பெரும்பான்மை சிறுபான்மையாகப் போகிறது என்ற இந்தப் பயம் தலைவர்கள் மனதில் இருந்தே வந்துள்ளது. திரு.எச் .ஜே.சி. பெரேரா சிங்கள மக்களின் உரிமைகளுக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய எந்த உடன்படிக்கையையும் தான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றார். அவரைப் பொறுத்தவரையில் அது சரி. ஒரு இனத்துக்குத் தலைவன் என்றால் தனது இனத்தின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது அந்தத் தலைவனின் கடைமை. ஆனபடியால்தான் கடந்த 50 வருடங்களாக அப்படி நடந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கடமையைச் செய்வதுபற்றி நான் குறை கூற வரவில்லை. பின் ஏன் இதை எடுத்துக் கூறுகிறேன் என்றால், கனவான்கள் என்று சொல்லக்கூடிய பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் சேர்ந்து கௌரவமான முறையில் செய்துகொண்ட ஒப்பந்தங்களைக் கிழித்து எறிந்த சரித்திரத்திலே முதன்முதலாக நிகழ்ந்த சம்பவம் இது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகச் சொன்னேன்.

## கதை இரண்டு

### யாழ்ப்பாணத்தின் 'மகேந்திர' ஒப்பந்தம்

அதன் பின்பும் அரசியல் சீர்திருத்தம் வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வற்புறுத்தப்பட்டே வந்தது. ஒற்றுமையாகக் கேட்க வேண்டும் என்று இங்கிலாந்து நிறுத்திப் பிடித்தது. சிலோன் நாஷனல் காங்கிரசிலிருந்தோ சேர் அருணாசலம் முதலிய தமிழ்த் தலைவர்கள் வெளியேறி விட்டார்கள். ஆனபடியால் யாழ்ப்பாணத்திற்கு ஒரு தூது கோஷ்டி அனுப்பப் பட்டது. காங்கிரஸ் கோஷ்டி அதற்கு இந்தச் சபையின் சபாநாயகராக இருப்பவரின் பிரசித்தி பெற்ற தந்தையார் திரு.சி.இ.கொரியா தலைமை தாங்கினார். திரு.சி.இ. கொரியாவையும் அவர் சகோதரர் திரு.விக்டர் கொரியாவையும் தமிழர்கள் என்றுமே மறக்க முடியாது. அந்த நாட்களில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக

முன்னணியில் நின்று போராடியவர்கள் இந்த கொரியா சகோதரர்கள். இப்பொழுது நான் குறிப்பிடுவது 1925ம் ஆண்டில் செய்யப்பட்ட இரண்டாவது சிங்களவர் தமிழர் ஒப்பந்தத்தை. யாழ்ப்பாணத்தில் இதை 'மகேந்திர ஒப்பந்தம்' என்று சொல்வார்கள். யாழ்ப்பாணத்திலே திரு. (பின்பு சேர் ) வைத்தியலிங்கம் துரைச்சாமியின் வீட்டுக்குப் பெயர் 'மகேந்திரா' என்பது. இரு தூதுக்குழுவினரும் இந்த வீட்டில் வைத்துப் பேச்சு வார்த்தை நடத்தி ஒப்பந்தம் செய்துகொண்டபடியால் 'மகேந்திர ஒப்பந்தம்' என்று வழங்கப்பட்டது.

திரு.சி.இ. கொரியா தலைமையில் யாழ்ப்பாணம் சென்ற இந்த காங்கிரஸ் தூதுக்கோஷ்டியிலே திருவாளர்கள் டி.பி ஜயா, ஜோர்ஜ் இ.டி.சில்வா, சி. இ விக்டர், எஸ்.கொரியா, எம். எச்.ஜயதிலக, எம். ஏ. அருளானந்தம், பி. டி.எஸ் குலரத்ன, ஆர். எஸ்.எஸ்.குணவர்த்தனா, எஸ். முத்தையா ஆகியோர் அங்கம் வகித்தனர்.

யாழ்ப்பாணத்திலே தமிழர் தூதுக்கோஷ்டியில் திருவாளர்கள் வைத்தியலிங்கம் துரைச்சாமி, ஏ.கனகரத்தினம், ஏ.ஆர் சுப்பிரமணியம், எல்.ஆர்.ஸ்பென்சர், எல். பெயிலி மயில்வாகனம், டி.ஆர் நல்லையா, எஸ். ஈ.தம்பையா, எஸ்.இராசரத்தினம் ஆகியோர் இருந்தார்கள். திரு. இராசரத்தினம் இன்னும் உயிருடன் இருக்கிறார் என்று நினைக்கின்றேன்.

இரு தரப்பினரும் கூடி அந்த 1925ம் ஆண்டு சிங்களவர்- தமிழர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்கள். அந்த ஆண்டிலே கண்டியில் கூடிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் அந்த ஒப்பந்தம் சமர்ப்பிக்கப்பட்டது. அது ஒரு நீண்ட ஒப்பந்தம். அதன் முதலாவது பந்திதான் நான் எடுத்துக்கொண்ட விஷயத்துக்குத் தேவையானது. அதை நான் முன்சொல்லிய காங்கிரஸ் கைப்புத்தகத்திலிருந்து வாசிக்க விரும்புகிறேன்.

'இந்த ஆலோசனைக் கூட்டம் பொருந்திக் கொள்ளுவதாவது சட்டசபையைப் பொறுத்தவரையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் மக்களுக்கும் மேல்மாகாண இலங்கைத் தமிழருக்கும் கொடுக்கப்படும் பிரதிநிதித்துவமும், இலங்கையின் ஏனைய பாகங்களுக்குக் கொடுக்கப்படும் பிரதிநிதித்துவமும் வருங்காலத்தில் வகுக்கப்படும் அரசமைப்புச் சட்டத்தில் ஒன்றுக்கு இரண்டு என்ற விகிதாசார அடிப்படையில் இப்பொழுது இருப்பதுபோல அமைந்திருக்கவேண்டும்' என்பதாகும்.

மீண்டும் அதே பிரதிநிதித்துவத்தைப் பற்றியதுதான். விகிதாசாரத்தை 1: 2 என்று தீர்மானித்தார்கள். அதன் பின் என்ன நடந்தது? காங்கிரஸ் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் முடிவு ஒன்றும் எடுக்கப்படவில்லை. ஏற்கவுமில்லை. நிராகரிக்கவுமில்லை. கூட்டத்துக்கு வந்திருந்த பிரதிநிதிகள் மத்தியில் உடன்பாடு காண முடியவில்லை. எனவே அடுத்த கூட்டத்தில் ஆராய்வதெனப் பின்போடப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் வேறு பல விஷயங்களும் இடம்பெற்றிருந்தன. காங்கிரஸில் தமிழர் மகாஜனசபைக்கு என்ன பிரதிநிதித்துவம் என்பன போன்ற விஷயங்கள். ஆனால் அதிமுக்கியமான ஒப்பந்தம் சட்டசபையில் சிங்களவருக்கு இரண்டு அங்கத்தவர்கள் என்றால் தமிழருக்கு ஒரு அங்கத்தவர் என்ற ஒப்பந்தம் மீது தீர்வு காணவில்லை.

அடுத்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் 1926இல் காலியில் நடந்தது. ஆச்சரியம் என்னவென்றால் அதன் நிகழ்ச்சிநிரலில் இந்த விஷயம் இடம்பெறவேயில்லை. உடனே விக்டர் கொரியா பிரச்சனையைக் கிளப்பினார். காங்கிரஸ் கைப்புத்தகத்தில் 71ம் பக்கத்தில் இந்த விஷயம் விளக்கப்பட்டிருக்கிறது. அதை வாசிக்க விரும்புகிறேன்.

'தலைமையுரைக்குப்பின் காங்கிரஸ் தேநீருக்காக 1/2 மணித்தியாலம் இடைவேளைக்குப் பின்பு திரும்பவும் கூடியபொழுது திரு. விக்டர் கொரியா தலைவரின் அனுமதி கேட்டார் நிகழ்ச்சிநிரலில் இல்லாத விஷயம் ஒன்றை எழுப்புவதற்காக. அந்த விஷயம் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைமட்டும் பாதிப்பதல்ல, தேசத்தின் கண்ணியத்தையே பாதிப்பதாகும்' என்றார்.

தலைவர் குறுக்கிட்டு, 'திரு. கொரியா, ஏதோ கேள்வி கேட்கப்போவதாக நான் நினைத்தேன். ஆனால் பேசுவதைத் தடுக்க விரும்பவில்லை' என்றார்.

திரு. கொரியா ' நிகழ்ச்சிநிரலில் ஒரு குறிப்பிட்ட தீர்மானம் சேர்க்கப்படாமல் விடுபட்டிருக்கிறது. ஏன்' என்று கேட்டார்.

# 23

தலைவர் 'காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியிலே நாட்டில் உள்ள சகல சங்கங்களும் அங்கம் வகிக்கின்றன. இந்த விஷயங்கள் எல்லாம் கமிட்டிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டன. வேறு விளக்கம் தேவையில்லை. நிகழ்ச்சிநிரல் தயாரிப்பதற்கு முன் திரு. கொரியா கிளப்பும் விஷயம் கமிட்டிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவேண்டும்' என்று பதிலளித்தார்.

திரு. கொரியா 'சென்ற வருஷம் திரு. பிரான்சிஸ் டி சொய்சாவிடம் (திரு.பிரான்சிஸ் டி சொய்சாதான் கடந்த வருஷம் காங்கிரஸ் தலைவர்) நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்கி இந்த வருஷக் கூட்டத்தில் முதல் விஷயமாக இந்தச் சிங்கள-தமிழ் ஒப்பந்தம் எடுத்துக்கொள்ளப்படும் என்று எனக்கு வாக்குத் தந்திருந்தாரே! என்றார்

திரு. பிரான்சிஸ் டி சொய்சா 'நான்அப்படிச் சொல்லவில்லை'.

திரு.கொரியா 'காங்கிரஸ் மகாசபையின் விசேஷ கூட்டத்தில் இது கொண்டுவரப்படும் என்று சொன்னாரே'.

திரு. பிரான்சிஸ் டி சொய்சா 'இது விசேஷ கூட்டம் இல்லை'.

திரு. கொரியா 'அப்படியானால் இன்னும் மிக மோசமானதல்லவோ?'

திரு. பி.ஜிவேந்திர சிங்கி எழுந்து, 'தமிழர்-சிங்களவர் ஒப்பந்தம் பழங்கதை. அதை இப்போ கிளறமுடியாது'.

திரு. கொரியா எழுந்து 'நான் இந்த விஷயத்தைக் கிளப்பியது காங்கிரசின் சொந்த நன்மைக்காகவே. ஏன் என்றால் தமிழர் மத்தியில் ஒரு அபிப்பிராயம் நிலவுகிறது. காங்கிரஸ் தலைவர்களை நம்ப முடியாது; சிங்களத் தலைவர்களின் சொல் செல்லாக் காசு போன்றது என்று அவர்கள் கருதுகிறார்கள்' என்றார்.

தலைவர் திரு. கொரியாவைப் பார்த்து. 'இத்துடன் இந்த விவாதத்தை நிற்பாட்டிவிட்டுப் பின்னேரம் கமிட்டியில் இதைப் பேசிக் கொள்ளலாமே. பகிரங்கமாகக் கருத்து வேற்றுமைகளைக் காட்டிக் கொள்வதனால் திரு. கொரியா அக்கறை கொண்டுள்ள விஷயத்திற்கு நன்மை கிடைக்கப்போவதில்லை' என்று ஆலோசனை கூறினார்.

இதன்பின் திரு.பிரான்சிஸ் டி சொய்சா தன்பெயரில் இருந்த பிரேரணையைப் பிரேரிக்க எழுந்தார். திரு.டி. சொய்சாவே சிங்கள-தமிழ் ஒப்பந்தத்தை முறியடித்தார் என்று திரு. விக்டர் கொரியா குற்றஞ்சாட்டியிருந்தபடியால் அதுபற்றி விளக்கம் கூற முற்பட்டார்.

திரு. பிரான்சிஸ் டி சொய்சா விளக்கம் கூற முயன்றபொழுது திரு.வி.எஸ். பெரேரா எழுந்து 'திரு.கொரியாவுக்குப் பேச இடம் கொடுக்காதபொழுது திரு.டி சொய்சாவுக்குப் பேச இடம்கொடுக்கக்கூடாது' என்றார். 'திரு.கொரியாவுக்கு விளக்கம் கொடுப்பது தனது கடமை' என்று சொல்லி திரு.சொய்சா தலைவரின் அனுமதியைக் கோரினார்.

திரு.கொரியா 'எனக்கு ஆட்சேபனை இல்லை;விளக்கத்தை வரவேற்கிறேன் ' என்றார்.

திரு.டி சொய்சா சொன்னார் 'சிங்கள மக்களின் கண்ணியமும், எனது சொந்தக் கண்ணியமும் பாதிக்கப்பட்டுள்ளதென்ற கருத்து திரு.கொரியாவின் கேள்வியில் அடங்கியுள்ளது. சென்ற ஆண்டு அந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டபொழுது பின்பு ஒரு விசேட கூட்டத்தில் ஆராயப்படவேண்டுமென்று அது பின்போடப்பட்டது உண்மையே. ஆனால் இந்த வருடாந்தக்கூட்டத்தில் ஆராயவேண்டுமென்று ஒருத்தரும் கருதவில்லை. திரு.கொரியாவுக்கும் தெரியும். கமிட்டியில் இந்த விஷயம் ஆராயப்பட்டது. நாட்டிலுள்ள சகல சமூக சங்கங்களின் அபிப்பிராயங்களையும் அறியும்வரையில் இந்த விசயத்தை எடுத்துக்கொள் வதில்லையென்று தீர்மானிக்கப்பட்டது. சிங்கள-தமிழ் ஒப்பந்தத்தின் அபிமானத் தந்தைகளான திரு.ஜோர்ஜ் ஈ.டி. சில்வாவும் மற்றையோரும் கொண்டுவந்த பிரேரணையின்பேரில் இப்படித் தீர்மானிக்கப்பட்டது ' என்றார்.

இப்படியான விளக்கத்தோடு அந்த இரண்டாவது சிங்கள-தமிழ் ஒப்பந்தமும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. (தொடரும் )

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com





**Dansk-Tamilsk Venskabsforening**
**டெனிஸ் தமிழ் தோழமை ஒன்றியம்**
**Danish Tamil Friendship Association**
PO Box 313 . DK-7400 Herning . Tel. 97 12 55 93 . Giro no. 7 84 59 52

SAN 1

படிப்பகம்